

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) ஈரோடு மாவட்டம், சித்தோடில் நடைபெற்ற ஊடகவியலாளர் அரவிந்த் குணசேகர் – ஸ்ரீநிதி ராதாகிருஷ்ணன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர் அரவிந்த் குணசேகர் – ஸ்ரீநிதி ராதாகிருஷ்ணன் இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில் பாலாஜி, ஏ.ஜி.வெங்கடாசலம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு, சித்தோடு, ஆவின் பால்பண்ணை வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இவ்விழாவில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் க. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி நாகரத்தினம், முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு, சித்தோடு, ஆவின் பால்பண்ணை வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இவ்விழாவில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி நாகரத்தினம், முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் து துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) கோயம்புத்தூரில், கழக மூத்த முன்னோடியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விடுதலை விரும்பி அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடல் நலம் குறித்து விசாரித்தார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன், கோவை மாநகர் மாவட்ட செயலாளர் துரை செந்தமிழ் செல்வன், விடுதலை விரும்பி அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் உடனிருந்தனர்.

# தி.மு.க. மூன்றெழுத்தல்ல; உள்ளிருந்து நம்மை இயக்கும் உயிரெழுத்து!





சென்னை, நவ.28-

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு :-

**நேரம் காலம் பார்க்காமல் தமிழ்நாடு முழுக்கச் சுற்றிக் கழகப் பணி ஆற்றிக்கொண்டிருந்த காலகட்டத்தில், மேற்கு மண்டலத்துக்குள் நுழைந்தாலே, “நம் வீடு இருக்கிறது வாருங்கள்” என்று அழைத்துச் சென்று கவனித்துக் கொண்ட கழகச் சொத்துப் பாதுகாப்புக்குழு முன்னாள் உறுப்பினரான ஜெ.கே.கே.சுந்தரம் அவர்களது இல்லத்திற்கு நெடுநாள் கழித்து இன்று சென்றேன்.**

**பாசத்துடன் வரவேற்று பழைய நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார் அவரது துணைவியார் திருமிகு. ராஜாம்மாள் அவர்கள். அவரது மகனும் தற்போதைய சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினருமான ஜெ.கே.கே.எஸ்.மாணிக்கம் அவர்களும் அவரது குடும்பத்தினரும் என் மேல் பொழிந்த பாசத்தில் நனைந்து உள்ளம் நெகிழ்ந்தேன்!**



**அடுத்ததாக, கழக மூத்த முன்னோடியும், தனது கம்பீர உரைவீச்சால் நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் முத்திரை பதித்தவருமான திரு. விடுதலை விரும்பி அவர்களது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது நலனை விசாரித்தேன்; அவரோ #SIR பணிகள் குறித்துக் கேட்டு, மக்களின் வாக்குரிமை என்ற ஜனநாயக நலன் குறித்து விசாரித்தார்!**

**முதுமையில் அனுபவங்களை அசைபோடுபவர்களுடன் அன்பாய் ஆறுதலாய் இருக்கும் நேரங்களில் மனம் இளமையாகிறது! அவர்களும் புத்துணர்ச்சி பெறுகிறார்கள்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) திருப்பூரில் நடைபெற்ற திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் – திருமதி செ.சாந்தாமணி தம்பதியினரின் மகன் செ.திலக்ராஜ் – சு.வைஷ்ணவி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.


